DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: ST.C. No.288 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஸ்ரீதரன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 12.03.2026

---

**முதல் விசாரணை**

1.நான் தற்போது பரமக்குடியில் Divisional Excise officer ஆக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் நான் ஆதிதிராவிடர் நலவாரியம் முதுகுளத்தூர் தனி வட்டாட்சியராக பணியாற்றி தேர்தல் பறக்கும் படையில் பணி அமர்த்தப்பட்டிருந்தேன். கடந்த 09.04.2024 தேதி இரவு 7.15 மணியளவில் தேர்தல் ரோந்து தொடர்பாக நான், SSI சிவகுமார், காவலர் வசந்தகுமார்,பெண் காவலர் தனுசியா ஆகியோர் ரோந்து சுற்றி வரும்போது தொண்டி வட்டானம் சாலையில் ஒரு கடையின் அருகே

ஒலிபெருக்கிகளுடன் அதிகமாக சத்தம் எழுப்பி கொண்டு கட்சியின் கொடியை அவ்விடத்தில் வைத்து தேர்தல் விதிகளை மீறி பொதுமக்கள் அவ்விடத்தில் செயல்பட்டதால் நான் எங்கள் படையில் இருந்த காவலர்களிடம் சொல்லி ஒலிபெருக்கியை இயக்கி கொண்டிருநத நபரிடம் சத்தத்தை குறைக்குமாறு சொல்ல சொன்னேன். அவர்கள் சென்று தெரிவித்த பின்னர் சுமார் 2,3 நபர்கள் வந்து என்னை பார்த்தார்கள். அவர்கள் தெரிவித்த தகவலின் படி மேற்படி ஒலிபெருக்கிகள், கட்சி கொடிகளை வைத்தவர் சேவியர் என்று தெரிந்துகொண்டு சம்பவம் தொடர்பாக நான் தொண்டி காவல்நிலையம் சென்று தேர்தல் விதிமீறல் தொடர்பாக புகார் அளித்தேன் என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் காவல்நிலையத்தில் மேற்படி கொடுத்த புகார் மனுதான். அதில் இடம்பெற்றுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. சம்பவயிடத்தில் சுமார் 500 நபர்கள் இருந்திருப்பார்கள். சம்பவயிடத்திலிருந்து தொண்டி காவல்நிலையம் சுமார் 2 கிலோமீட்டர் துூரம் இருக்கும். தொண்டி வட்டானம் சாலையில் சம்பவயிடமானது குறிப்பிட்டு எந்த இடம் என்று புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான்அளித்த புகாரில்என்னுடன் யார் யார் எல்லம் வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு நான் சென்று பார்க்கையில் சுமார் 20,25 போலிசார்கள் அங்கு இருந்தார்கள். விதிமீறலுக்கு காரணமான பொறுப்பாளர் சம்பவயிடத்தில் இருந்தாரா என்று விசாரித்து தெரிந்து கொண்டாரா என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. அதிகமாக சத்தம் எழுப்பியதாக தெரிவித்துள்ளேன். சத்தம் எழுப்பிய மைக்செட்டையும் அதன் உரிமையாளரையும் குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2.நாங்கள் புகார் கொடுத்துவிட்டு மைக்செட்டை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். தேர்தல் நேரத்தில் நிகழ்வு நடத்துவதற்கு குறிப்பிட்ட பகுதியின் தேர்தல் அதிகாரியிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். ஆஜர் எதிரி நிகழ்வு நடத்துவதற்கு அனுமதி பெற்றாரா என்ற விவரம் நான் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் சம்பவத்தன்று 7.15 மணிக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் புகார்அளிக்கும்போது எனது படையின் குழுவினர் என்னுடன் இருந்தார்கள் என்றால்

சரிதான். ஆஜர் எதிரி என்ன பொறுப்பில் உள்ளார் என்றால் அந்தவிவரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி எந்த கட்சியை சார்ந்தவர் என்று புகாரில் தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. ஆஜர் எதிரி சம்பவசமயத்தில் TMMk கட்சியின் மாநில பொறுப்பு வகித்து வந்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சம்பவசமயத்தில் ஆளும் கட்சியினரின் தூண்டுதலின் பேரில் ஆஜர் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.